www.padippakam.com

# வானவில்

VAANAVIL
ISSUE – 20 AUGUST 2012

இதழ் - 20 ஆவணி 2012

# கிழக்கு மக்கள் சகல இனவாத சக்திகளிடமிருந்தும் தமது மாகாண சபையைக் காப்பாற்ற வேண்டும்!

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் 2012 செப்ரெம்பர் 08ம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தல் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பலப்பரீட்சைக் களமாக இருப்பதால், தேர்தல் நெருங்க நெருங்க பிரச்சாரச் சூடும் அதிகரித்துச் செல்கிறது.



அதேவேளை தேர்தல் முடிவை அறியும் ஆவலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் மக்கள் மத்தியிலும் அதிகரித்துச் செல்கிறது.

நாட்டிலுள்ள மற்றைய மாகாணங்களைவிட கிழக்கின் விசேட அம்சம் என்னவெனில், அங்கு தமிழ் – முஸ்லீம் – சிங்கள என மூவின மக்களும் ஓரளவு சமமான அளவில் சேர்ந்து வாழ்வதுதான். முன்னைய காலங்களில் வடக்கைப் போல கிழக்கும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் அவர்களது பாரம்பரியப் பிரதேசம் என்று சொல்லிக்கொண்டாலும், இன்று அந்த நிலைமை இல்லை. இன்று தமிழர்கள் அங்குள்ள சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக மட்டுமே உள்ளனர். முஸ்லீம் மக்களும் சிங்கள மக்களும் இணைந்தால் சனத்தொகையின் மூன்றிலிரண்டாக அவர்கள் இருப்பார்கள்.

கிழக்கின் இன விகிதாசாரம் மாற்றமடைந்ததிற்கு, நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து (1948 பெர்ரவரி 04), முதலாவது ஆட்சியை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி தொடக்கி வைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தொடர்ந்ததால்தான், இந்த நிலைமை ஏற்பட்டது என தமிழ்த் தலைமைகள் குற்றம்சாட்டி வந்துள்ளன.

அவர்களது குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருப்பினும், அவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த தமிழ்த் தலைமைகள் இல்லாமல் போனதும் மறுபாதி உண்மையாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக ஆட்சியிருந்த அரசுகள் முன்வைத்த குறைந்தபட்சத் திட்டங்களைக்கூட, எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் மாறி மாறிக் குழப்பி வந்ததுபோல, அந்த எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தமிழ்த் தலைமைகளும் அதைக் குழப்பி வந்துள்ளன என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தமிழ் மக்களின் முழு உரிமைகளையும் பெற முடியாவிட்டாலும், கிடைத்த சந்தர்ப்பங்களைப்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# பேர்லினிலிருந்து அவுஸ்திரேலியாவரை தொடரும் பெயர்தல்

இதுவரையில் இலங்கையிலிருந்து யுத்தம் காரணமாக அல்லது பாதுபாப்பற்ற சூழல் காரணமாக இலங்கைக்குள் இடம்பெயர்ந்த, இலங்கையைவிட்டு இடம்பெயர்ந்த அல்லது புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையின் புள்ளிவிபரங்கள் பற்றி எவருமே கவலைப்படுவதில்லை. யுத்தத்தால் மரணித்தவர்கள் தொடர்பான எண்ணிக்கை பற்றி தமிழர் தரப்பில் ஒரு புள்ளிவிபரமும் இலங்கை அரசு தரப்பில் இன்னொரு புள்ளிவிபரமும் இருப்பதால், இதில் எந்த புள்ளிவிபரம் சரியென்பதும் எவருக்கும் தெரியாது. புலம்பெயர்ந்த மக்களை மரணித்தவர்கள் அல்லது காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்ப்பதில் பூரிப்பவர்களும் நம்மிடையே இருப்பதால், இலங்கைக்கு வெளியே உயிர் வாழும் இலங்கையர்களின் எண்ணிக்கையின் புள்ளிவிபரங்கள் ஓரளவிற்கேனும் சரியாக கணக்கெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான கணக்கெடுப்பு, இலங்கையின் மனிதவளத்தில் எவ்வளவு வீதத்தினரை இழந்திருக்கிறோம் என்பதை அறிவதற்கும் உதவியாக இருக்கும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் யுத்தம் நின்றுவிட்டது. யுத்தத்தால் மரணித்தல் என்பது எல்லா தரப்பிலும் (யுத்தத்தில் ஈடுபட்டவர்கள், பொதுமக்கள், மாற்றுக்கருத்துக்கொண்டவர்கள்) நின்றுவிட்டது. ஆனால் யுத்தத்தை காரணங்காட்டி வளர்ச்சியடைந்த நாடுகள் நோக்கிய புலம்பெயரும் மக்களின் சிந்தனைப்போக்கில் மாற்றம் எதுவும் நிகழ்ந்ததாக தெரியவில்லை. இலங்கையில் இன்னமும் பாதுபாப்பற்ற சூழல் நிலவுகின்றது, அதன் காரணமாக தமிழர்கள் இலங்கையைவிட்டு வெளியேறுகிறார்கள் என்ற வகையில் அரசியல் செய்பவர்களுக்கு, தொடரும் இந்த புலப்பெயர்வு நன்கு துணைபுரிகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் (இலங்கையின் வடக்குக் கிழக்குவாழ் தமிழர்கள் மாத்திரமன்றி சிறிய தொகையிலான தென்னிலங்கை மக்களும் இதில் உள்ளடக்கம்) மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர். இதில் பெருமபாலானவர்கள் அவுஸ்திரேலியாவிற்கே படகுகள் மூலமாக சென்றுள்ளதாக தெரிகின்றது. இலங்கையில் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அவுஸ்திரேலியா நோக்கிய இலங்கையர்களின் படகுப்பயணம் முதலில் தாய்லாந்து, இந்தனோசியா போன்ற நாடுகளிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கேரளாவின் கடற்கரையோரப் பகுதிகளும் இந்த பயணத்திற்கு ஏறுதுறையாக இருந்தது. (இந்தியாவின் மேற்கு கடற்கரை பிரதேசத்திலிருந்து, இந்தியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள அவுஸ்திரேலியா நோக்கிய பயணம்) தாய்லாந்து, இந்தனோசியா, கேரளா போன்ற இடங்களில் கெடுபிடிகள் அதிகமாக, இப்போது இலங்கைத்தீவின் கடற்கரையோரங்கள் தாராளமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அவுஸ்திரேலியா நோக்கிய பயணத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான படகுகள் நீண்ட ஆழ்கடல் பயணத்துக்கு ஒவ்வாத சாதாரண மீன்பிடிப்படகுகள். இந்த பழைய இத்துப்போன படகுகளை 'பிரயாண முகவர்கள்' கொள்வனவு செய்து, அவற்றினை அவுஸ்திரேலியா நோக்கிய ஒருவழிப் பயணத்தில் ஈடுபடுத்துகின்றனர். மிகவும் ஆபத்து நிறைந்த இந்த படகுப்பயணத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் (சிலவேளைகளில் ஆயிரக்கணக்கானவர்களாக கூட இருக்கலாம். ஏனெனில் புறப்படுபவர்கள், வழியில் இறப்பவர்கள், கரை சேருபவர்கள், எத்தனை பேர் என்பதைக் கணக்கிட யாரிடம் பயணப்பட்டியல் இருக்கின்றது?) இறந்திருப்பதாக ஊடகச்செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை அதிகளவினர்களாக காட்ட முனைபவர்கள், இவ்வாறு படகுப்பயணத்தில் இறப்பவர்கள் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படுவதாக தெரியவில்லை. ஏனெனில் இந்த இறப்பில் யாரிடம் போர்க்குற்றம் காணுவது என்பது இவர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கலாம்.

1971 ஆண்டு ரோகண விஜேவீரா தலைமையிலான ஜே.வி.பி. கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இலங்கையைவிட்டு வெளியேறி, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி புகலிடம் பெற்றதிலிருந்தே, இலங்கையர்களின் புகலிட வாழ்க்கை ஆரம்பித்தது எனலாம். எனினும் தமிழர்களின் பெயர்வே புகலிடத்தில் புதிய அத்தியாயத்தை எழுதத் தொடங்கியது. 1977 ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் திறந்த, தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளாலும் இனவாத ஒடுக்குமுறை காரணமாகவும், 1980களிருந்து பேர்லினை நோக்கி பல ஆயிரக்கணக்கான வடபகுதி தமிழ் இளைஞர்களை பயணிக்க வைத்தது. இவ்வாறு பயணத்தை ஆரம்பித்தவர்கள், மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள்வரை சென்று, அந்தந்த நாடுகளின் பிரஜா உரிமை பெற்று வாழும் இவர்கள், இன்று புகலிடத்தமிழர்கள் என்ற புதிய இனப்பிரிவினரை தோற்றுவித்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால் தொடரும் இந்த புலப்பெயர்வால், இலங்கையில் குன்றிவரும் மனிதவளம் பற்றி இவர்கள் மாத்திரமன்றி, எவருமே அக்கறைப்படுவதில்லை *

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



படிப்பகம்

www.padippakam.com

# இஸ்ரேல் – ஈரான் போர் மூளுமா?

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், 1960களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு மிக அருகில் கியூபா நாட்டில் (1959ல் அங்கு அமெரிக்க சார்பு சர்வாதிகாரி பட்டிஸ்டா அரசை ஃபிடல் கஸ்ட்ரோ, சேகுவேரா தலைமையிலான புரட்சிப்படைகள் தூக்கியெறிந்த பின்னணியில்) ஏவுகணைகளை நிறுத்தியபோது, இன்னொரு உலக யுத்தம் மூளுமோ என்ற அச்சம் உலகம் முழுவதும் நிலவியது. அதன் பின்னர் ஆங்காங்கு வியட்நாம் யுத்தம் உட்படப் பல யுத்தங்கள் நிகழ்ந்தாலும், பாரிய போர்களுக்கு அவை இட்டுச் செல்லவில்லை. ஆனால் தற்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, அந்தப் பிராந்தியத்தில் வல்லரசுகள் சம்பந்தப்படும் பாரிய யுத்தம் ஒன்றுக்கு வழிவகுக்கலாம் என, உலகின் பல முன்னணி அரசியல் – இராணுவ ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என, அதன் பரம வைரி நாடான இஸ்ரேலும் அதன் மேற்கத்தியக் கூட்டாளிகளும் குற்றம்சாட்டி வருகின்றன. தான் அணுகுண்டு தயாரிக்கவில்லை எனவும், மின்சாரம் போன்ற தேவைகளுக்கே தனது அணு சக்தியைப் பயன்படுத்தப்போவதாகவும், ஈரான் திரும்பத்திரும்பக் கூறி வந்தாலும், அதை இஸ்ரேலும் அதன் கூட்டாளிகளும் நம்பத் தயாராக இல்லை.

ஈரான் அணுகுண்டு ஒன்றைத் தயாரித்துவிடுவதற்கு முன்னதாக, அதன் அணுசக்தி நிலையங்களை விரைந்து தாக்கி அழிப்பதற்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக செய்திகள் கசிந்தவண்ணம் உள்ளன. இஸ்ரேலிய அரசும் அதை மறுக்காது ஆமோதிப்பது போல நடந்து கொள்கிறது. அவ்வாறான ஒரு நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபடுமானால், ஈரானும் சும்மா இருக்கப்போவதில்லை. அது தன்னிடம் உள்ள நீண்ட தூரம் பாயும் அதி நவீன ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலைத் தாக்கும். அவ்வாறு தாக்கும்போது, அது சனச்செறிவான இஸ்ரேலிய நகரங்களையே குறி வைத்துத் தாக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. அப்படியான ஒரு சூழலில் பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலிய மக்கள் இறந்து போவதற்கு வாய்ப்புண்டு.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவும், பாதுகாப்பு அமைச்சர் ஈகுட் பராக்கும், ஈரானின் அணுசக்திப் பேரொசை இஸ்ரேலின் இருப்புக்கே சவாலாக அமையப்போகின்றது எனத் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து, ஈரான் மீதான தமது தாக்குதல் திட்டத்தை நியாயப்படுத்தி வருகின்றனர். ஈராக்கினதும் சிரியாவினதும் அணுசக்தி திட்டங்கள் இஸ்ரேலுக்கு பாரிய அச்சுறுத்தல் எனச் சொல்லி சில வருடங்களுக்கு முன்னர் அது தாக்குதல் நடாத்தியதை வைத்துப் பார்க்கையில், ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்துவதற்கான சாத்தியங்கள் மிகவும் அதிகம் இருப்பதாகவே தோன்றுகிறது. அத்துடன் இஸ்ரேல் தாக்கினால் அதற்குப் பதிலடியாக ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடாத்தும் என எதிர்பார்ப்பதால், அதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக இஸ்ரேலிய மக்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.




ஆனால் இஸ்ரேலிய அரசாங்கத்தின் இந்த உத்தேசத் தாக்குதல் திட்டத்துக்கு அதன் அமைச்சரவையிலும், பொதுமக்கள் மத்தியிலும் கணிசமான எதிர்ப்புகளும் இருக்கின்றன. அவ்வாறான ஒரு தாக்குதல் இஸ்ரேலிய மக்களுக்குத் தேவையில்லாத அழிவுகளைக் கொண்டு வரும் என இஸ்ரேலிய அரச எதிர்ப்பாளர்களும், பொதுமக்களும் அஞ்சுகிறார்கள். மிக அண்மைக்காலமாக இஸ்ரேலில் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி – சுகாதார வசதிகள் பற்றாக்குறை, வீடில்லாமை என்பனவற்றை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். எனவே ஈரானுடனான மோதலில் இஸ்ரேலிய அரசாங்கம் வழமையாகக் கையாளும் யூத தேசியவாதம் பொதுமக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் எடுபடும் என்ற கேள்வியும் இருக்கின்றது.

இஸ்ரேல் மேற்கத்திய நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஈரானைத் தாக்குமாக இருந்தால், மேற்கு நாடுகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்காக, ஈரான் தனது கடல் பகுதியிலுள்ள ஹோமுஸ் நீரிணை ஊடான பிரதான கப்பல் போக்குவரத்து மார்க்கத்தைத் தடை செய்யக்கூடும். அவ்வாறு தடை செய்தால், இந்த வழி ஊடாக நடைபெற்று வரும் உலகின் 20 வீதமான எண்ணெய் ஏற்றுமதி முடங்கிப்போக வாய்ப்புள்ளது. அத்துடன் ஈரானின் ஆதரவுடன் இரகசியமாகப் பல நாடுகளில் இயங்கி வரும் ஹெஸ்பொல்லா அமைப்பு ஈரானுக்காகப் பல நாடுகளில் தாக்குதல்களையும் நடாத்தக்கூடும். அண்மையில் கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில்



படிப்பகம்

www.padippakam.com

இஸ்ரேலிய உல்லாசப் பயணிகள் பஸ் ஒன்றைத் தாக்கிப் பலரைக் கொலை செய்தது இந்த ஹெஸ்பொல்லா அமைப்பே எனக் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகமும், கனடா உட்படப் பல ஐரோப்பிய நாடுகளும், இஸ்ரேல் அரசு ஈரான் மீது உடனடியாகத் தாக்குதல் நடாத்துவதை விரும்பவில்லை. பொருளாதாரத் தடைகள் மூலமும், இராஜதந்திர முயற்சிகள் மூலமும் ஈரானை வழிக்குக் கொண்டு வருவதில் இன்னும் அதிய முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும் என அவை கருதுகின்றன. அதிலும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைப் பொறுத்தவரையில், அவர் தனது இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலை விரைவில் எதிர்நோக்கவிருப்பதால், இஸ்ரேல் ஈரான் மீது வலிந்து தாக்குதல் நடாத்தினால், அது அவருக்கு ஒரு விசப்பரீட்சையாக அமையக்கூடும்.

ஈரானைப் பொறுத்தவரையிலும் கூட யுத்தம் ஒன்றுக்கான பரிபூரண தயாரிப்பு நிலையில் அது இருப்பதாகக் கூறிவிட முடியாது. அது ஈராக்குடன் நடாத்திய பல வருடப் போருக்குப்பின்னர், அதன் புரட்சிக் காவலர் படை இன்னமும் பலவீனமடைந்த நிலையிலேயே இருக்கின்றது. அத்துடன் அதன் மிக நெருங்கிய நட்பு நாடான சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மேற்கத்தைய சக்திகளின் ஆதரவுடன், ஜனாதிபதி ஆசாத்தின் ஆட்சியை ஈடாட்டம் கொள்ள வைத்துள்ளதால், ஈரானைப் பொறுத்தவரை அதுவும் ஒரு எதிர்மறை நிலைமையே.

சர்வதேச சட்டங்களைப் பொறுத்தவரை, ஒரு நாடு அணு ஆயுத உற்பத்தி அபிலாசைகளைக் கொண்டிருக்கின்றது என்ற ஒரே காரணத்துக்காக, அந்த நாட்டின் மீது வலிந்து போர் தொடுப்பதோ அல்லது இராணுவ நடவடிக்கை எடுப்பதோ சட்டபூர்வமற்றதாகும் என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அப்படிப் பார்த்தால், இஸ்ரேல் வலிந்த தாக்குதல் ஒன்றை ஈரான் மீது தொடுக்குமாக இருந்தால், சர்வதேச சமூகத்தால் அது கண்டிக்கப்படக்கூடிய வாய்ப்பு நிறையவே உண்டு. *

# கஸ்ட்ரோவுக்கு வயது 86!



கியூபப் புரட்சியின் தளகர்த்தரும், கியூபக் கம்யூனிஸ்ட் கட்சி, அரசு என்பவற்றின் முன்னாள் தலைவருமான ஃபிடல் கஸ்ட்ரோ தனது 86வது வயதை 2012 ஆகஸ்ட் 13ம் திகதி பூர்த்தி செய்துள்ளார். 1959ல் அமெரிக்க சார்பு சர்வாதிகாரி பட்டிஸ்டாவின் எதேச்சாதிகார ஆட்சியைத் தூக்கி எறிந்த புரட்சிக்குத் தலைமைதாங்கிய கஸ்ட்ரோ, புரட்சிக்குப் பின்னர் கியூபாவை ஒர் உறுதிமிக்க சோசலிச நாடாகக் கட்டியெழுப்பினார்.

புரட்சி நடைபெற்ற நாள் முதல் அமெரிக்காவும் (உலகின் மிகச் சக்திவாய்ந்த அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தையும் கியூபாவையும் வெறுமனே 160 கிலோமீட்டர் கடல் பிரதேசம்தான் பிரிக்கிறது) அதன் நேச நாடுகளும் விதித்த பொருளாதாரத் தடைகளையும், அரசியல் சீர்குலைவு நடவடிக்கைகளையும், கஸ்ட்ரோ தலைமையிலான கியூபப் புரட்சி அரசாங்கம் வெற்றிகரமாக முறியடித்து, தமது சோசலிசத் தாய்நாட்டைப் பாதுகாத்துள்ளனர். கஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கும் கூட ஏகாதிபத்தியவாதிகள் 50க்கும் மேற்பட்ட தடவைகள் முயற்சி செய்து தோல்வி கண்டனர்.

கியூபாவுக்கு பெருமளவு உதவிகள் செய்து வந்த சோவியத் யூனியன் 1990ல் தகர்ந்து போனபோது, கியூபாவும் ஆட்டம் கண்டுவிடும் என ஏகாதிபத்தியவாதிகள் கனவு கண்டனர். ஆனால் எந்த எதிர்ப்புரட்சிகரப் புயலும் புரட்சிகரக் கியூபாவை அசைக்க முடியவில்லை. அமெரிக்காவை உலுப்பிய 'கத்தரினா' புயல்கூட, கியூபாவிடம் வாலாட்ட முடியவில்லை.

புரட்சி நடைபெற்ற 1959 முதல் 2008 வரை சுமார் 48 ஆண்டுகள் கியூபாவின் தானைத் தலைவராகச் செயல்பட்டு வந்த ஃபிடல், சுகவீனம் காரணமாக 2008ல் நிரந்தரமாகப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் சில வேளைகளில் மட்டும் கியூபாவுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரமுகர்களைச் சந்தித்து வரும் கஸ்ட்ரோ, இடையிடையே உலக விவகாரங்கள் குறித்து தெளிவான சிந்தனையுடன் கட்டுரைகளையும் கியூப ஊடகங்களில் எழுதி வருகின்றார். இவ்வருடம் மார்ச் மாதம் கியூபாவுக்கு வருகை தந்த பாப்பரசர் பெனடிக்ற் XVI அவர்களையும் சந்தித்து உரையாடியிருந்தார். கஸ்ட்ரோ ஓய்வுபெற்ற பின்னர், அவரது சதோதரரும், புரட்சியில் அவருடன் தோளோடு தோள் நின்று போராடியவருமான ராவுல் கஸ்ட்ரோ ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுத் தனது சகோதரரின் வழியில் கியூபாவை வழி நடாத்தி வருகின்றார்.

கஸ்ட்ரோ தனது 86வது அகவையைப் பூர்த்தி செய்துள்ள இவ்வேளையில், உலகம் முழுவதும் பரந்து வாழும் கோடானுகோடி மக்கள், அவர் நலமுடன் மேலும் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென வாழ்த்தியுள்ளனர். *



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி....

# இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும் இலங்கை - இந்திய உறவுகளும்

இலங்கையும் இந்தியாவும் பூகோளரீதியாக மட்டுமின்றி, வரலாறு மற்றும் கலாச்சாரரீதியாகவும் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்ட நாடுகள். இலங்கையோடு ஒப்பிடுகையில் இந்தியா பரப்பளவாலும் சனத்தொகையாலும் பல மடங்கு பெரிய நாடு. அதனால் இந்தியாவில் நிகழ்ந்த ஒவ்வொரு வரலாற்றுச் சம்பவங்களும் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன. இந்திய சுதந்திரத்தின் தாக்கமே இலங்கைக்கும் பிரிட்டிசாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்ற கருத்தும் இன்றுவரை பலமாக உண்டு.

இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்களவர்களும, சிறுபான்மை இனமான தமிழர்களும் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்தே இலங்கையில் வந்து குடியேறியவர்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இரண்டு பிரதான மதங்களான பௌத்தமும் சைவமும் கூட இந்தியாவிலிருந்து வந்தவையே.

## சேவற்கொடியோன்

சுதந்திரத்துக்கு வெகுகாலத்துக்கு முன்னரே தென்னிந்திய மன்னர்களுக்கும் சிங்கள மன்னர்களுக்கும் இடையில் நட்பும் பகையுமான உறவுகள் இருந்து வந்துள்ளன. தென்னிந்திய மன்னர்கள் பல தடவைகள் இலங்கை மீது படையெடுத்து நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியும் புரிந்துள்ளனர். அதேவேளையில் தென்னிந்தியாவின் சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கிடையில் அடிக்கடி நிகழ்ந்து வந்த யுத்தங்களின்போது, சில தரப்புகளுக்கு ஆதரவாக சிங்கள மன்னர்கள் தமது படைகளை அனுப்பி உதவியுள்ளனர். கண்டி இராசதானியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (இயற்பெயர் கண்ணுச்சாமி) கூட தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒரு தமிழனே.

சில சிங்கள மன்னர்கள் தென்னிந்திய இளவரசிகளைத் திருமணமும் செய்துள்ளனர். பல பௌத்த ஆலயங்களில் விகாரைகளுக்கு அருகே சிவன், பிள்ளையார், முருகன் ஆலயங்களும் கட்டப்பட்டிருப்பதை இன்றும் சில இடங்களில் காணலாம். அவை சிங்கள மன்னர்களின் தென்னிந்திய தமிழ் மனைவிகளின் வழிபாட்டுக்காகக் கட்டப்பட்டவை என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

இவ்வளவு தொடர்புகள் இருந்தும் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இலங்கை அரசுகளுக்கும் இந்திய அரசுகளுக்கும் (குறிப்பாக தமிழ் நாட்டுக்கும்) இடையிலான உறவுகள் மேம்போக்கானவையாக அல்லது போலியானவையாகவே இருந்து வந்துள்ளன. அதற்குக் காரணம் இரு நாடுகளினதும் அரசியல், பொருளாதார, வெளியுறவுக் கொள்கைகள் என்று துணிந்து கூறலாம்.

இந்தியா 1947 ஆகஸ்ட் 12ம் திகதி சுதந்திரம் பெற்றது. அதைத் தொடர்ந்து இலங்கை 1948 பெப்ருவரி 4ம் திகதி சுதந்திரம் பெற்றது. (இன்று அமெரிக்காவுக்குப் போட்டியாக வளர்ந்திருக்கும் மக்கள் சீனம் 1949 அக்டோபர் 1ம் திகதி சுதந்திரம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது) சுதந்திரத்துக்குப் பின்னான இந்த 65 வருட காலத்தில் இந்தியாவினதும் இலங்கையினதும் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் பல நெளிவு சுளிவுகளுக்கூடாகச் சென்றுள்ள போதிலும், அவை சமாந்திரமாகச் சென்றுள்ளன எனக் கூறமுடியாது.



இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவகர்லால் நேரு ஆரம்பகாலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதியாக இருந்தார். அதனால் அரசியல் ரீதியாக உலகின் பல ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை அவர் ஆதரித்ததுடன், 1955ம் ஆண்டு இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் நடந்த ஆசிய நாடுகளின் மாநாட்டில் சோசலிச சீனாவுடன் சேர்ந்து, ஏகாதிபத்திய தலையீடுகளுக்கெதிரானதும், நாடுகளுக்கிடையில் சமத்துவ உறவைப் பேணுவதுமான 'பஞ்சசீல கொள்கை'யையும் உருவாக்க உழைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

மறுபக்கத்தில், இலங்கையில் சுதந்திரத்துக்கப் பின்னர் அமைந்த முதலாவது அரசு, ஏகாதிபத்திய அடிவருடியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாக இருந்ததால், அது உள்நாட்டில் தரகு முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றியதுடன், அயலுறவுக் கொள்கையாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கொள்கையைப் பிரதி செய்தது. அதன் காரணமாகவும், டீ.எஸ்.சேனநாயக்காவின் ஐ.தே.க அரசு இந்திய வம்சாவழி தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமை என்பனவற்றைப் பறித்ததின் காரணமாகவும் இலங்கை – இந்திய உறவுகள் பாதிப்புக்கு உள்ளாகத் தொடங்கின.

அதாவது சுதந்திரத்துக்குப் பிந்திய இந்தியாவினதும் இலங்கையினதும் கொள்கைகள் நேர் எதிராகவே இருந்தன. இந்தியா ஓரளவு சரியான வழியிலும் இலங்கை தவறான, ஏகாதிபத்திய சார்பு வழியிலும் சென்றமையே இந்த முரண்பாடு ஏற்படுவதற்குக் காரணமாகும். இந்தக் காலகட்டத்தில் ஐ.தே.க அரசு மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்தது மட்டுமின்றி, இந்திய எதிர்ப்புப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டது. மறுபக்கத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழர்களின் பூர்வீக நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் செய்ததுடன், 'சிங்களம் மட்டும்' கோசத்தையும் முன்வைத்து வந்தது.

இவையும், இவைபோன்ற ஐ.தே.க அரசின் தமிழர் விரோத, இந்திய விரோத நடவடிக்கைகளும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசலகள் ஏற்படக் காரணமாயின. இந்த நிலைமை 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆட்சிக்கு வரும்வரை தொடர்ந்தது.

பண்டாநாயக்க ஆட்சிக்கு வந்ததும் பல புரட்சிகரமான மாற்றங்களை அவர் இலங்கையில் ஏற்படுத்தினார். அவர் மிகத்துணிகரமான முறையில் திரிகோணமலையிலும், கட்டுநாயக்காவிலும் நிலை கொண்டிருந்த பிரித்தானிய கடற்படையையும், விமானப்படையையும் உடனடியாக நாட்டிலிருந்தும் வெளியேற்றினார். அதுமட்டுமின்றி அவரும், அவர் ஏகாதிபத்திய சக்திகளின் பின்னணியில் 1959ல் கொலை செய்யப்பட்ட பின்னர் பல தடவைகள் ஆட்சிக்கு வந்த அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவும், பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளைத் துணிகரமாக எடுத்து, 1948ல் பெயரளவில் பெறப்பட்ட சுதந்திரத்தை மேலும் வலுப்படுத்தினர்.

துறைமுகங்கள் தேசிய மயம், வங்கிகள் தேசியமயம், காப்புறுதி நிறுவனங்கள் தேசியமயம், பஸ் சேவை தேசியமயம், பாடசாலைகள் தேசியமயம், பெருந்தோட்டங்கள் தேசியமயம், நெற்காணி மசோதா, காணி உச்ச வரம்புச் சட்டம், இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம் தேசியமயம், சுயமொழிக்கல்வி, ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்கள மொழியை நிர்வாக மொழியாக்கியது (இந்த ஒரு விடயத்தில் மட்டும் ஐ.தே.கவின் தூண்டுதலால் பண்டாரநாயக்க தவறிழைத்தார்), ஊடகத்துறையில் மா∴பியாவாகச் செயற்பட்ட 'லேக்ஹவுஸ்' நிறுவனத்தைத் தேசியமயமாக்கியது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை பண்டாரநாயக்காக்களின் அரசாங்கங்கள் எடுத்தன.

இவை தவிர நாட்டின் சாதாரண உழைக்கும் மக்களான தொழிலாளாகள், விவசாயிகள், ஆசிரியர்கள், சுதேச வைத்தியர்கள், கைவினைஞர்கள், கலாச்சாரச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மீனவர்கள் என அனைத்துத்துறை மக்களின் மேம்பாட்டுக்காகவும் அவர்களது அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. இடதுசாரிக் கட்சிகளுடன் அவர்கள் கொண்டிருந்த உறவும் அதற்கொரு அடிப்படைக் காரணமாகும்.பண்டாரநாயக்கவின் துணிச்சலான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சிய இந்தியப் பிரதமர் நேரு, 'சற்று மெதுவாகப் போகும்படி' அவரை எச்சரிக்கை செய்ததாக, அந்நாளைய அரசியல் வட்டாரங்களில் கதை உலாவும் அளவுக்கு அவரின் வேகம் இருந்தது.
மறுபக்கத்தில் பண்டாநாயக்க ஆட்சிக்கு வந்த 1956 காலகட்டம் அளவில், இந்தியாவின் சுதந்திரப்போராட்ட வீரர்களில் ஒருவராகக் கருதப்பட்டு, புகழின் உச்சியில் இருந்த நேருவின் அரசாங்கம் மெல்ல மெல்ல மக்கள் மத்தியில் செல்வாக்கு இழக்கத் தொடங்கியது. அதற்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் சில முக்கியமானவை.

நேரு முற்போக்கு அரசியல் சிந்தனையாளராக தன்னை வெளிப்படுத்தி வந்தபோதிலும் (அவரது சகபாடியான காந்தியின் கற்பனாவாத 'கிராமத் தன்னிறைவு' பொருளாதாரக் கொள்கையை விட நேருவின் பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவ அடிப்படையாக இருந்தாலும், முற்போக்காக இருந்தது)), அவர் சுதந்திர இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், இந்தியாவில் இருந்த ஏகாதிபத்திய பொருளாதார நலன்களில் பெரிதாகக் கை வைக்கவில்லை. இது பண்டாரநாயக்காவுக்கும் நேருவுக்கும் இடையிலான அடிப்படையான வித்தியாசமாகும்.

அதன் காரணமாக இந்திய உழைக்கும் மக்கள் மாடாய் உழைத்து செல்வத்தை உருவாக்கிய போதும், அந்நிய முதலீட்டாளர்களும், உள்ளூர் பண முதலைகளும் அவர்களது உழைப்பைச் சுரண்டுவதை நேருவால் தடுக்க முடியவில்லை. அதனால் இந்தியாவில் பெரியதொரு மூலதனத் திரட்சியை இந்திய அரசால் உருவாக்க முடியாமல் போனதுடன், அதன் விளைவாக தேசிய ரீதியிலான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் உருவாக்க முடியாமல் போய்விட்டது. அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும் ஏற்பட்டு மக்கள்

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க......



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சீன விரோதக் கூச்சல் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது!

அண்மையில் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நேரத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சீனாவைத் தாக்கி மிகவும் அவதூறான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார். சீனா இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகள் வடக்கு கிழக்கில் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழர்களை அழிக்கும் நோக்குடையவை என்றும், சீனா ஏற்கெனவே தனது தீபெத் மாகாணத்தில் சீனர்களைக் குடியேற்றி தீபெத்தியவர்களை அழித்து வருகிறது என்றும் வேறு குற்றப்பட்டியல் வாசித்திருக்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரனின் அறிக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமான அறிக்கையா அல்லது பல விடயங்களில் அவர் கூட்டமைப்பின் தலைமையின் அங்கீகாரமின்றி கடந்த காலங்களில் விடுத்த அறிக்கை போன்ற ஒன்றா என்பது தெரியவில்லை. அதைக் கூட்டமைப்புத் தலைமைதான் தெளிவுபடுத்த வேண்டும். (கடந்த காலங்களில் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த பல தாறுமாறான அறிக்கைகள், கூட்டமைப்பின் அனுமதியில்லாதவை என்றும், அதுபற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லிப் புழுங்கியதாகவும் கூறப்படுகிறது. அதனால் தான் சுரேசின் கொட்டத்தை அடக்க சிறீதரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் அணியை சம்பந்தன் தமிழ் கூட்டமைப்புக்குள் இழுக்க முயற்சிக்கிறார் என்ற கருத்தும் உண்டு)

சுரேசின் தனிப்பட்ட குணாம்சங்கள் பற்றியோ, கடந்த காலங்களில் அவர் ஒரே நேரத்தில்கூட எதிரும் புதிருமான பலரின் ஏஜண்டாக எப்படி வேலை செய்தார் என்பதைப் பற்றியோ விவாதிப்பது அல்ல இச்சிறு குறிப்பின் நோக்கம். அவரது விசமத்தனமான சீன எதிர்ப்பப்புப் பிரச்சாரத்தின் உள்நோக்கத்தையும், அதனால் எழும் விபரீதத்தையும் சுட்டிக்காட்டுவதே இதன் நோக்கம்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எப்படி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இரண்டாயிரம் வருடங்களுக்கும் முற்பட்டதோ, அதுபோன்றதுதான் சீனாவுடனான உறவும். சுதந்திரத்துக்குப் பிறகு அவ்வுறவு இரு நாட்டு அரசுகளாலும், மக்களாலும் மேலும் சிறந்த முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம், காலனித்துவம் என்பனவற்றுக்கு எதிரான போராட்டத்தில் இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் ஆதரித்து வந்துள்ளனர். இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய போதெல்லாம் சீனா தன்னலம் கருதாது உதவி வந்துள்ளது.

அதேபோல, சீனா ஐக்கிய நாடுகள் சபையில் தனது சட்டபூர்வ உரிமையை வென்றெடுப்பதற்கும், ஒரு சீனா என்ற கொள்கையை நிலை நாட்டுவதிலும் இலங்கை சீனாவுக்கு உதவி வந்துள்ளது. இலங்கையில் புலிப் பாசிசப் பயங்கரவாதிகளை முறியடிப்பதிலும், இந்தியா போலவே சீனாவும் இலங்கைக்கு பாரிய உதவிகளைச் செய்துள்ளது. இலங்கையுடனான சீனாவின் உறவும் சரி, இந்தியாவின் உறவும் சரி பல்துறை சார்ந்தது. அதில் இராணுவ உதவிகளும் அடங்கும். சீனா தான் வழங்கும் உதவிகளை இப்படி இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என எந்தவொரு நாட்டுக்கும் நிபந்தனை போடுவதில்லை. அதுமட்டுமின்றி, சீனாவின் எதிரி நாடுகள் என வர்ணிக்கப்படும் அமெரிக்கா, இந்தியாவுடன் கூட, சீனாவுக்கு இராணுவ ஒத்துழைப்புகள் உண்டு. இன்றைய உலக ஒழுங்கில் இவை தவிர்க்க முடியாதவை.

சுரேசின் தீபெத் பற்றிய கற்றுக்குட்டித்தனமான கூற்றும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தீபெத் சீனாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். எப்படி சீனாவில் 1949ல் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையில் புரட்சி வெற்றிபெறும்வரை, அந்நியர்களும் உள்ளூர் நிலப்பிரபுக்களும் சீன மக்களை கசக்கிப் பிழிந்து கொடுமைப்படுத்தினரோ, அதேபோல தீபெத்தில் தலாய்லாமா என்ற பௌத்த மதகுரு அடிமை முறையிலான ஆட்சியை நடாத்தி தீபெத்திய மக்களைக் கொடுமைப்படுத்தினார். சீனாவில் புரட்சி வெற்றிபெற்ற பின்னர், தீபெத்திலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டு அம்மக்கள் விடுவிக்கப்பட்டனர்.

முதலில் தீபேத்திய விடுதலையை ஏற்பதாக நடித்த தலாய்லாமா, பின்னர் அங்கு ஏற்பட்ட மக்களாட்சியைப் பொறுக்க முடியாதவராய் அதைத் தூக்கியெறிய முயன்று தோற்றுப்போய் இந்தியாவுக்குள் ஓடி ஒழிந்து, அங்கிருந்துகொண்டு மேற்கு நாடகளின் உதவியுடன் சீனாவுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். இந்த உண்மை சுரேசுக்குத் தெரியாதா அல்லது கயிறு திரிக்கிறாரோ தெரியவில்லை.

சுரேஸ் ஒரு காலத்தில் சோசலிசம் பேசினாலும், இப்பொழுது அவருக்கு இனிப்பானது மேற்கத்தைய ஏகாதிபத்திய முதலாளித்துவ முறைமையும், தமிழ் இனவாதமும்தான். ஏனெனில் அவை இரண்டும்தான் அவரைப் பிழைக்க வைத்துக்கொண்டு இருக்கின்றன. சுரேஸ் மட்டுமின்றி, இலங்கையில் உருவான சகல தமிழ்த் தலைமைகளும் கம்யூனிசத்துக்கு எதிரானவைதான். ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் என எல்லாத் தலைவர்களும் கம்யூனிசத்துக்கும் சீனா, சோவியத்யூனியன் போன்ற சோசலிச நாடுகளுக்கும் எதிராக இருந்தவர்கள்தான்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.........



படிப்பகம்

www.padippakam.com

# பேரினவாத ஐக்கிய தேசியக்கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும்

தமிழ் இன அழிப்புக்குக் கால்கோள் அமைத்து, அதை தொடர்ந்து நடத்திவந்த சிங்களப் பேரினவாதத்தின் பிரதான சக்தியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் (ஐ.தே.க) இணைந்து, இவ்வருட மேதினத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் நடத்தியது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்தி வந்த...
1943ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் கோசத்தை முன்வைத்த.....
1948இல் இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கிய....
பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டி யாத்திரை நடத்திய......

நீர்வை பொன்னையன்

1977ஆம் ஆண்டு தேர்தலின் பின் தமிழ் மக்களுக்கெதிராக நாடு பரந்த ரீதியில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்ட....
1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்த.....
1981ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ்.மாவட்ட சபைத் தேர்தலில் இராணுவத்தையும் பொலிசையும் கொண்டு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்காக, தேர்தல் அதிகாரிகளை புறந்தள்ளிவிட்டு 17 வாக்குச் சாவடிகளை எரித்ததுடன், காடையர்களைக் கொண்டு தேர்தலை நடாத்திய.....
தமிழ் மக்களின் அரும்பெரும் பொக்கிசமான யாழ்.பொது நூலகத்தை தீயிட்டு எரித்த.....
1983இல் இன வன்செயலைத் தூண்டிவிட்டு தமிழ் மக்களின் உயிர்களும், உடமைகளும் அழிக்கப்பட்டதை வேடிக்கை பார்த்து ரசித்த.....
இனப்பிரச்சினையை இனவாதமாக்கி, பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், முதியோர் ஆகியோரைக் குண்டு வீச்சுக்களாலும், செல் அடிகளாலும் கொன்று குவித்த....
தமிழ் மக்களின் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளையும் மற்றும் கோவில்களையும் குண்டு வீசித் தகர்த்த....
குண்டு வீச்சு விமானத்திலிருந்து பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலியின் வழிகாட்டுதலில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி தேர் அழிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணம் சிவன் கோவில் போன்ற வணக்கஸ்தலங்கள் தகர்க்கப்பட்டதுடன், மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புகள் மீது மலம் நிரம்பிய பீப்பாய்களை உருட்டி அவர்களை அசிங்கப்படுத்திய சக்தி எது? மூலகர்த்தாக்கள் யார்? சந்தேகத்திற்கு இடமின்றி, இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கைகோர்த்துள்ள சிங்களப் பேரினவாத ஐ.தே.கவினரே அவர்கள்.



இலங்கை 1948இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரமடைந்த பின்னர் முதலாவது அரசை அமைத்த ஐ.தே.கவே, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது. சிங்களப் பேரினவாத ஐ.தே.கவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நீண்டகால நோக்கத்தைக் கொண்டவை. தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பாரம்பரியப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தி, அப்பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களைச் சிறுபான்மையாக்கும் உள் நோக்கம் கொண்டவை அவை.



படிப்பகம்

www.padippakam.com

ஐ.தே.கவின் ஸ்தாபகரும் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமருமான டீ.எஸ்.சேனநாயக்க நடைமுறைப்படுத்திய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை, இன்றுவரை அக்கட்சியின் சகல தலைவர்களும் பெரிதாக விதந்து பேசுகிறார்கள். அவ்வாறு பதவியாவில் குடியேற்றப்பட்ட சிங்கள குடியேற்றவாசிகள் மத்தியில் 1950ம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த டீ.எஸ்.சேனநாயக்க நிகழ்த்திய பின்வரும் உரை, அவர் நடைமுறைப்படுத்திய சிங்களக் குடியேற்றங்களின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

**“இன்று நீங்கள் இங்கு அழைத்துவரப்பட்டு, உங்களுக்கு ஒரு காணித்துண்டு வழங்கப்பட்டிருக்கிறது. உங்கள் கிராமத்திலிருந்து நீங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், ஒருநாள் முழுநாடும் உங்களையே எதிர்பார்ப்புடன் நோக்கும். சிங்கள மக்களின் இறுதி யுத்தம் பதவியா சமவெளியிலேயே நடைபெறும். இந்த நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிப்பவர்களுடன் நீங்கள் கணக்குத் தீர்க்க நேரிடும்”**

சிங்களப் பேரினவாத உணர்வை வளர்ப்பதற்கு விதைக்கப்பட்ட வித்துகளே டீ.எஸ்.சேனநாயக்கவின் சிங்களக் குடியேற்றங்கள் என்பதை இந்த உரையிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இந்த அணுகுமுறையை ஐ.தே.க ஒருபோதும் கைவிடவில்லை. டீ.எஸ்.சேனநாயக்கவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவரது மகன் டட்லி சேனநாயக்க, தனது தந்தையின் பாதையில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்களை நடைமுறைப்படுத்தினார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1957இல் செய்யப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்ட கண்டி யாத்திரையின் போது, அவர் மேற்கொண்ட பிரச்சாரத்தில், **“அந்த ஒப்பந்தம் நிறைவேறினால் புதிய சிங்களக் குடியேற்றங்களை அமைக்க முடியாமல் போய்விடுவதுடன், பழைய குடியேற்றங்களிலிருந்தும் சிங்களவர்கள் வெளியேற நேரிடும்”** என வெளிப்படையாகவே தெரிவித்தார்.

துரித மாவலி அவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொண்ட குடியேற்றங்களும் டீ.எஸ்.சேனநாயக்கவின் நோக்கங்களைப் பிரதிபலிப்பனவாகவே இருந்தன. 1960இல் தான் வெளியிட்ட ‘இலங்கையின் வரண்ட வலயக் குடியேற்றத்திட்டத்தில் இன முரண்பாடு’ என்ற தனது கட்டுரையில், பீபிள்ஸ் என்ற அறிஞர் மாவலித்திட்டம் பற்றிக் கூறுவதைக் கவனித்துப் பார்ப்போம்.

**“வளமானதும் பண்பாடுமிக்கதுமான நாகரீகத்திற்கு வழிவகுத்ததான உலர் பிரதேச நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட முற்காலத்தின் பௌத்தம் சார்ந்த சிறப்புக்கள் பற்றிய படிமங்களை ஐக்கிய தேசியக் கட்சி உணர்ச்சி முனைப்புடன் சித்தரித்தது. பௌத்தர்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக, தமிழ் இந்து ஆக்கிரமிப்பாளர்கள் வெறுக்கப்படும் எதிரிகளாகக் கருதப்பட்ட கற்பனை கலந்த கடந்த காலத்தைத் துரித மாவலி அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் நேரடியாகவே நினைவூட்டினார்கள்.”**

இந்தக் காலகட்டத்தில் ‘மாவலி வம்ச கத்தாவ’ (மாவலி வம்சத்தின் கதை) என்ற ஒரு நூலை எழுதுவிக்கும் முயற்சியில் ஐ.தே.க அரசின் மாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க ஈடுபட்டார். மாவலிப் பிரதேசத்தில் துட்டகெமுனு வாழ்ந்த காலப்பகுதி பற்றி விரிவாக அந்த நூலில் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. **ஒரேயொரு மாகாணத்தைத் தவிர வேறெந்த மாகாணத்திலும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக இல்லாதபடி இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கும் ஆலோசனையைப் பிற்காலத்தில் வெளியிட்டவரான பேராசிரியர் மத்தும பண்டா அந்த நூலை எழுதும் பொறுப்பை ஏற்றிருந்தார்.** என்ன காரணத்தினாலோ அந்த முயற்சி முற்றுப்பெறவில்லை.

இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் தமிழ் பேசும் மக்களின் வாழ்புலங்களை சிறிது சிறிதாக அபகரிப்பது சாத்தியமில்லை என்றுகண்ட ஜே.ஆரின் அரசாங்கம், இராணுவ நடவடிக்கைகளின் மூலம் இடப்பெயர்வுகளை ஏற்படுத்தி அதைச் சாத்தியமாக்கியது. 1983 ஜூலை தமிழ் இன சங்காரத்துக்குச் சில நாட்கள் முன்னர், ஐ.தே.க அரசின் அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் பேசும்போது பின்வருமாறு கூறினார்:

**“வடக்கில் தமிழ்ப் பெரும்பான்மை இருந்தது என அந்த நாட்களில் சொல்லப்பட்டது. இப்பொழுது பெரும்பான்மையான தமிழர்கள் சிங்களவர்கள் மத்தியில் வாழ்கிறார்கள் எனக் கூறும் காலம் வந்துவிட்டது.”**

இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை இடம்பெயர வைத்து, இந்த நிமையை ஏற்படுத்தும் நோக்கம் ஐ.தே.க அரசுக்கு இருந்ததையே பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலியின் இந்த உரை புலப்படுத்துகின்றது.

1959இல் கிழக்கு மகாணத்தில் ஒரு தனியான சிங்களத் தேர்தல் தொகுதி இருந்ததுடன், ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் திரிகோணமலையில் கந்தளாய் போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டதின் மூலம், 1976இல் சேருவெல என்ற இரண்டாவது சிங்களத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.

வடக்கில் வவுனியாப் பிரதேசத்தில் மேற்கொண்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம், அம்மாவட்டத்தில் தனியான ஒரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கப்பட்டது. நெடுங்கேணிக்குத் தெற்கே கென்ற், டொலர் பண்ணைகளை ஆக்கிரமித்து சிங்களக் குடியிருப்புகளை உருவாக்கியதின் மூலமும், இராணுவ முகாம்களை நிறுவியதின் மூலமும், வெலிஓயா (மணலாறு) குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது.

1931 – 46 காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் 46 வீதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை பின்னர் 36 வீதமாகக் குறைக்கப்பட்டது. அதேவேளையில் 20 சதவீதமாக இருந்த சிங்களவர்களின் சனத்தொகை 36 வீதமாக உயர்த்தப்பட்டது. இத்தகைய தமிழர் விரோத நடவடிக்கைகளைச் செய்த ஐ.தே.கவின் இன்றைய வாரிசாக இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. அவர், தான் முன்னைய ஐ.தே.க தலைவர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றி நடப்பதாகப் பெருமையுடன் கூறி வருகிறார்.

**மிகுதி அடுத்த இதழில் தொடரும்...**

(80ஆவது அகவையைத் தாண்டி வாழும் நீர்வை பொன்னையன், இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவராவார். இலக்கியம் மட்டுமின்றி, இடதுசாரி அரசியல், தொழிற்சங்கத்துறை என்பனவற்றிலும் ஆழக் கால் பதித்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவராகச் செயலாற்றிய அவர், தற்பொழுது சுறுசுறுப்பாக இயங்கிவரும் 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்ற'த்தின் இணைப்பாளராகப் பணிபுரிகின்றார். அம்மன்றம் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் 'சிந்தனை வெளியீடு' தொடரின் 7ஆவது வெளியீட்டிலிருந்து இக்கட்டுரை நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்படுகிறது)

## 1995–2011: இந்தியாவில் தற்கொலைச் செய்த விவசாயிகளின் எண்ணிக்கை 2.90 லட்சம்!

1995 – ஆம் ஆண்டு முதல் 2011 – ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் 2,90,740 விவசாயிகள் தற்கொலைச் செய்துள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

பட்டினி, பொருளாதார நெருக்கடி, வங்கிக் கடன் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இத்தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. 1995 – ஆம் ஆண்டு முதல் 2012 – ஆம் ஆண்டு வரை 3 லட்சம் விவசாயிகள் தற்கொலைச் செய்துள்ளனர். இத்தகவலை மத்திய விவசாய துறை இணை அமைச்சர் ஹரீஷ் ராவத் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

இந்திய அரசு புள்ளிவிபரங்களின் படி இவ்வாண்டு 152 விவசாயிகள் தற்கொலைச் செய்துள்ளனர்.

விவசாயத்துறையின் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவும் அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருவதாக அமைச்சர் கூறினார். கேரளா, மஹராஷ்ட்ரா, கர்நாடகா, ஆந்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் 31 மாவட்டங்களில் 19.99 கோடி ரூபாய் மதிப்பிலான மறுவாழ்வு பணிகள் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் நடைமுறைப்படுத்தியதாக அமைச்சர் தெரிவித்தார். *

6ம் பக்கத்தொடர்ச்சி......

நேருவின் அரசாங்கம் மீது அதிருப்தி கொள்ள வைத்தது.

இன்னொரு பக்கம் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை நேருவின் அரசாங்கம் வழங்க மறுத்து வந்ததுடன், இந்தி மொழியையும் ஆட்சி மொழியாகத் திணிக்க முற்பட்டது. (பின்னர் பல்வேறு மாநில மக்களின் எதிர்ப்புக் காரணமாக ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஏற்றுக் கொண்டார்) காஸ்மீரின் சுதந்திரத்துக்காகப் போராடிய 'காஸ்மீர் சிங்கம்' சேக் அப்துல்லாவை நேருவின் அரசாங்கம் 13 ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்திருந்தது. ஆந்திராவில் தனித் தெலுங்கானா மாநிலம் கேட்டு கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் போராடிய மக்களை நேருவும், அவரது உள்நாட்டமைச்சர் வல்லேபாய் பட்டேலும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தனர்.

இவ்வாறாக நேருவின் இந்திய அரசாங்கம் பல நெருக்கடிகளை உள்நாட்டில் சந்தித்த போதிலும், உலகின் வல்லரசுகளான அமெரிக்காவுடனும், ரஸ்யாவுடனும் சமமான உறவுகளைப் பேணியதுடன், அயல்நாடான சீனாவுடனும் சுமூகமான உறவையே நேருவின் அரசாங்கம் கொண்டிருந்தது. ஆனால் இந்திய உப கண்டத்திலிருந்து காந்தி – ஜின்னா பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் பாகிஸ்தான் பிரிந்து போனபின்பு அந்த நாட்டுடன் இந்தியாவின் உறவுகள் எப்பொழுதும் மோசமாகவே இருந்து வந்தன. அந்தக் காலகட்டத்தில் நேருவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை காரணமாக அவர்மீது சந்தேகம் கொண்டிருந்த அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு சகல வழிகளிலும் உதவி வந்ததுடன், இந்தியாவை ரஸ்யாவிடமிருந்தும், சீனாவிடமிருந்தும் விலக்கி வைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது.

இன்னொரு பக்கத்தில், ரஸ்யாவில் ஸ்டாலின் மறைவுக்கப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜோர்ஜ் குருசேவ், சீனாவுடன் ஏற்பட்ட கம்யூனிச சித்தாந்த வேறுபாட்டின் காரணமாக எழுந்த பகைமையால், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவைச் சீர்குலைக்க முயன்று கொண்டிருந்தார். ஒருபக்கத்தில் அமெரிக்காவும் ரஸ்யாவும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாலும், மறுபக்கத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் முரண்பாட்டை ஏற்படுத்துவதில் ஒரே நிலைப்பாட்டில் இருந்தன.

இந்த நிலையில் இலங்கை மிகச்சிறிய நாடாக இருந்தபோதிலும், மதிநுட்பமாகவும், இராஜதந்திரத்துடனும் செயற்பட்டு, இந்தியா, சீனா, ரஸ்யா என்ற மூன்று நாடுகளுக்கிடையிலும் ஒரு சமாந்தர உறவைப் பேணிக்கொண்டது.

மிகுதி அடுத்த இதழிலும் தொடரும்....



படிப்பகம்

www.padippakam.com

# பாதுகாப்பற்ற கூடங்குளம் அணு உலையால் இலங்கையின் வட பகுதியும் பாதிக்கப்படலாம்!

தமிழகத்தின் கூடங்குளத்தில் ரஸ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள அணு உலை பாதுகாப்பற்றது எனக்கூறி, அதற்கு அருகாமையில் இருக்கும் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த ஒரு வருடமாகப் போராடி வருகிறார்கள். அந்த உலையின் பாதுகாப்பற்ற தன்மை பற்றி பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான ஞானி 'கல்கி' வார இதழில் எழுதிய கட்டுரையொன்றில் தெளிவாக விளக்கி இருக்கிறார். அந்தக் கட்டுரையை எமது வாசகர்களின் பயன் கருதிக் கீழே பிரசுரித்திருக்கின்றோம்.

இந்தக் கட்டுரையை வாசிக்கும் எவரும் தமிழகத்துக்கு அருகில் இருக்கம் இலங்கையின் வட பகுதிக்கும் கூடங்குள அணு உலையால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் புரிந்துகொள்ள முடியும். அதுமட்டுமின்றி பாதுகாப்பற்ற கூடங்குள அணு உலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழக மக்களுடன், இலங்கையின் வட பகுதி மக்களும் இணைய வேண்டியதின் அவசியத்தையும் புரிந்துகொள்ள முடியும். இந்தக் கட்டுரையை எழுதிய ஞானிக்கும், அதை வெளியிட்ட 'கல்கி'க்கும் எமது நன்றிகள்.

'வானவில்' ஆசிரிய குழு

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்தை ஒடுக்கி உலையைத் திறக்க மத்திய, மாநில அரசுகள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டதாக ஒரு மாயத்தோற்றம் மீடியா, பத்திரிகைகள் வழியே சில மாதங்களாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

அது பாதி உண்மைதான்.

மொத்தம் 55,795 பொதுமக்கள் மீது எஃ.ஐ.ஆர் போட்டு, அதில் 600 பேர் மீது ராஜ துரோக வழக்கு பதிவு செய்தும் கூட அவர்களால் கூடங்குளம், இடிந்தகரைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் உறுதியைக் குலைக்க முடியவே இல்லை.
தொடர்ந்து 300 நாட்கள் மக்கள் போராடிக் கொண்டேதான் இருக்கிறார்கள். உண்ணாவிரதம் மட்டும் அவர்களது போராட்ட வழியல்ல. நீதிமன்றங்கள் மூலமும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமும் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழு தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறது. இதனால் அடுத்தடுத்து அரசுகளின் பொய்கள் அம்பலமாகிக் கொண்டே இருக்கின்றன.

உலையை இயக்குவதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றில் சில நீதிமன்றங்கள் முன்னர் எழுப்பப்பட்டுள்ளன. சர்வதேச அணுசக்தி முகாமை விதித்திருக்கும் விதிகளைப் பின்பற்றாமல், உலையை இயக்கும் அனுமதியை இந்திய அணுசக்திக் கட்டுப்பாட்டு வாரியம் வழங்க முடியாது.

அணு உலையைச் சுற்றி 25 கிலோமீட்டர் சுற்றளவில் வசிக்கும் மக்களுக்கு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய பயிற்சியை, ஒத்திகையை நடத்தி முடிக்காமல், அணு உலையில் எரிபொருளை நிரப்ப முடியாது என்பதே விதி.

விபத்து ஏற்பட்டால், மக்களை இடம்பெயர்க்கவும், தயார்படுத்தவும் செய்யவேண்டிய வழிமுறைகளுக்கென்று ஒரு கையேடு (மேனுவல்) இருக்க வேண்டும். ஆனால் இந்த ஜூன் 9 அன்று அணு உலைக்கருகே இருக்கும் கிராமங்களில் பேரிடர் பயிற்சியும் ஒத்திகையும் நடத்தப்பட்டுவிட்டதாக அணு சக்தித்துறை அறிவித்திருக்கிறது.

அணு உலைக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது இடிந்தகரை. அடுத்த ஐந்து கிலோமீட்டர் சுற்றளவுக்குள் இருப்பவை கூடங்குளம், வைரவிகிணறு, செட்டிகுலம், ஸ்ரீரங்கநாதபுரம், பெருமணல், கூத்தப்புளி ஆகியவை. இந்தக் கிராமங்களில் எந்த ஒத்திகையும் நடாத்தப்படவில்லை.



கூடங்குள அணுமின் நிலையம்

உலையிலிருந்து ஏழு கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் நக்கநேரி என்ற கிராமத்துக்கு மாவட்ட அதிகாரிகளும், அணு உலை அதிகாரிகளும் வருகிறார்கள். ஊரில் பெரும்பாலோர் வேலைக்குப் போயாகிவிட்டது. எஞ்சியிருப்பது எழுத்தறிவற்ற கொஞ்சம் பெண்களும் குழந்தைகளும் மட்டுமே. இவர்களுடன் ஒரு மணி நேரம் பேசியிருந்துவிட்டு அதிகாரிகள் படை காரில் ஏறிப் போய்விட்டது. இதுதான் பயிற்சி, ஒத்திகை நடந்த லட்சணம்.

என்ன பேசப்பட்டது? டெங்கு காய்ச்சல் பற்றி விசாரித்தார்கள். உங்கள் பஞ்சாயத்துக்கு என்ன திட்டம் வேண்டும் என்று விசாரித்ததாக அந்தப் பஞ்சாயத்துத் தலைவரே சொல்லியிருக்கிறார். கொஞ்சம் அயோடின் மாத்திரை சாப்பிட்டால் கதிர்வீச்சு எதுவும் செய்யாது என்று சொன்னார்கள் என்ற அளவில்தான் நக்கநேரியில் அப்போது இருந்த சுமார் 100 பேரிடம் விசாரித்ததில் தெரியவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஓர் அணு உலை விபத்து ஏற்பட்டால் உடனே என்ன செய்ய வேண்டும் என்பது பிரமாண்டமான விடயம். மக்களைப் பல கிலோமீட்டர் தொலைவுக்கு அழைத்துச் செல்ல பஸ்களை ஏற்பாடு செய்ய வேண்டும். மிகக் குறைந்த நேரத்தில் அவை வந்து சேரவேண்டும். வீட்டைவிட்டு ஓடும்போது என்னென்ன எடுத்துக்கொள்ள வேண்டும், எதையெல்லாம் எடுக்கத் தேவையில்லை என்ற பட்டியலை மக்களுக்குச் சொல்லித்தர வேண்டும்.இது எதையும் செய்யாமல், பயிற்சியும் ஒத்திகையும் செய்யப்பட்டு விட்டதாக அரசுகள் கூசாமல் பொய் சொல்லியிருக்கின்றன. அணு உலையைச் சுற்றி வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு எந்தப் பயிற்சியும் தராமலே உலையை இயக்க அவசரப்படுகிறது அரசு.

அரசின் பொய்கள் தொடர்கின்றன.

தகவல் அறியும் உரிமை ஆணையத்திலும் நீதிமன்றத்திலும் போராடிப் போராடி கடைசியில் சைட் எவால்யுவேசன் றிப்போர்ட் எனப்படும் இட மதிப்பீட்டு அறிக்கையை அரசு தமக்குத் தர வைத்திருக்கிறது போராட்டக்குழு. ஆனால் இது ரஸ்ய கம்பனிக்குச் சொந்தமானது என்றும் அதை வெளியிட முடியாது என்றும் அரசு கூறி வந்தது.

கடைசியில் அரசு கொடுத்த அறிக்கை வெறும் 12 பக்கங்கள். அதிலும் நடுவே மூன்று பக்கங்கள் மிஸ்சிங். அறிக்கை தயாரிக்கப்பட்டது எண்பதுகளில். அறிக்கையை யார் எழுதினார்கள் என்ற பெயர் விபரங்கள் எதுவும் கிடையாது. இந்த அறிக்கைப்படி உலைக்கு பத்து கிலோமீட்டர் சுற்றளவில் பத்தாயிரம் பேர் வசிக்கும் எந்த ஊரும் இல்லை என்று ஒரு பெரிய பொய் சொல்லப்பட்டிருக்கிறது. முழுமையான தகவல்கள் எதுவும் இல்லாமல், ஒப்புக்கு ஓர் அறிக்கையை அளித்திருக்கிறது அரசு.

மக்களை ஏமாற்றுவது, நீதிமன்றத்துக்குச் சென்றால், அதையும் ஏமாற்ற பெயரளவில் ஆவணங்களைக் காட்டி ஏமாற்றுவது, சர்வதேச அணுசக்தி முகாமையை ஏமாற்ற, ஒப்புக்கு ஒத்திகை நடத்துவது என்று எல்லாரையும் எப்படியாவது ஏமாற்ற தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கிறது மத்திய அரசு. அதற்கு உடந்தையாக இருக்கிறது மாநில அரசு.

கூடங்குளத்தில் நிறுவப்படும் உலைகளின் அமைப்பு பற்றியே இப்போது சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. ரியாக்டர் பிரஸர் வெஸ்சல் எனப்படும் அணு உலை அழுத்தக் கொள்கலனில் நடுவே எந்த வெல்டிங்கும் இருக்காது என்று 2006ல் ரஸ்யாவுடன் போட்ட ஆவணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது அணுசக்திக் கட்டுப்பாட்டு வாரியம் கொள்கலனில் இரு இடங்களில் வெல்டிங் உள்ளதாகச் சொல்கிறது. இப்படி வெல்டிங் செய்யப்படும் இடங்களில் வெல்டிங் பொருட்கள் பலவீனமானவை என்பதால் பெரும் விபத்துக்கு வாய்ப்பிருப்பதாக முன்னர் கருதப்பட்டு புதிய உலை வடிவமைப்புகளில் வெல்டிங் இல்லாத கொள்கலன்கள் உருவாக்கப்பட்டன.

கூடங்குளத்துக்கு வழங்கப்படுவது அதிநவீன உலை என்று சொல்லப்பட்டது. ஆனால் பழைய மாதிரி வெல்டிங் உள்ள கலன்களே நிறுவப்பட்டுள்ளன. இதைப் பரிசோதித்துப் பார்த்துப் பழைய டிஸைன் என்றால் மாற்றச் சொல்ல வேண்டும். ஆனால் எரிபொருள் நிரப்பி உலை இயங்க ஆரம்பித்துவிட்டால், கலனை எடுத்து சோதிக்கவே முடியாது.

விபத்துகள் ஏற்பட்டால், ரஸ்ய கம்பனிக்கு அதில் பொறுப்பு எதுவும் இல்லை என்ற பிரச்னை வேறு தீர்க்கப்படாமலேயே இருக்கிறது.

ஆனால் ஏதாவது பொய் சொல்லி அணு உலையை நிறுவியே தீருவது என்று இருக்கும் அரசு இன்னொரு பக்கம், இந்த அணு உலைகளை எதிர்க்கும் மக்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகக் கருதுகிறது. பெங்களூருவில் இருக்கும் நிம்ஹான்ஸ் எனப்படும் மனநோய் ஆய்வு நிலைய மருத்துவர்களை இடிந்தகரைக்கு அரசு அனுப்பியிருக்கிறது. மக்கள் இப்படி பிடிவாதமாகப் போராடுவதன் உளவியல் என்ன என்று ஆராய்ந்து அதை 'குணமாக்க' (உடைக்க) வழிகள் என்ன என்று சொல்லும்படி மருத்துவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஆஸ்திக நண்பர் ஒருவர் பேஸ்புக்கில் ஒரு குறிப்பு எழுதினார் - பெரியாரோ பகுத்தறிவு இயக்கங்களோ என்னை நாத்திகனாக்கவில்லை. ஆனால் நித்தி, மதுரை ஆதீனம் போன்றோர் அதை நோக்கி என்னைத் துரத்துகிறார்கள் என்று. எனக்கு இப்படி சொல்லத் தோன்றுகிறது: எந்த ஆன்மீகக் குருவாலும், கோயிலாலும் என்னை ஆத்திகன் ஆக்க முடியவில்லை. ஆனால் அணு உலையை அமைத்து மனித குல அழிவை விரைவுபடுத்தியே தீருவோம் என்று முரட்டுப் பிடிவாதத்தோடு இயங்கும் இந்திய அரசுகள் என்னைக் கடவுளை நோக்கித் தள்ளுகின்றன. என்னை, இடிந்தகரை மக்களை, ஜெயலலிதாவை, மன்மோகனை எல்லாரையும் அணு அழிவிலிருந்து அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று புலம்ப ஆரம்பித்து விடுவேனோ? *

"இலக்கியாசிரியனின் கடமை வாசகனை எட்டுவதில்லை. அதற்கு எதிர்மாறாக, வாசகனின் கடமைதான் ஆசிரியனை எட்டிப்பிடிப்பது என்பதை வற்புறுத்த இன்று இலக்கிய விமர்சனம் உபயோகப்பட வேண்டும். இலக்கியாசிரியன் வாசகர்களையோ, ஓர் இலட்சிய வாசகனையோ எண்ணிக் கொண்டு எழுதுவதில்லை. வாசகன்தான் தன் இலக்கியத் தாகத்தில், 'நமக்கேற்ற ஆசிரியன் இவன்,' என்று தேடிக் கொண்டு இடைவிடாமல் ஓட வேண்டும் என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலக்கிய விமர்சனம் வாசகர்களுக்கு அடித்துச் சொல்ல வேண்டும்"
- க.நா.சு



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணத்திலிருந்து 'வானவில்' நோக்கி வந்த கடிதம்!

அன்புள்ள தோழருக்கு,

'வானவில்' பத்திரிகை ஆலோசனைக் கூட்டம் கனடாவில் நடந்ததாக பத்திரிகையில் படித்தேன். பத்திரிகையை எல்லா நாடுகளுக்கும் அனுப்புகிறீர்களா?

எனக்கு வரும் ஒரு பிரதியை நண்பர்களுக்குக் காட்டுவேன். பலர் 'நெற்' (Net) றில் படிக்கிறார்கள். 'தினமுரசு' சில கட்டுரைகளை மறுபிரசுரம் செய்யும்.

'வானவில்' குறித்து எமது தோழர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டு. பழைய கதைகளை மீண்டும் மீண்டும் பிரசுரிப்பதாகவும், தற்போதைய பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என்றும், வெளியிலிருந்து வரும் பத்திரிகை என்றும் விமர்சனங்கள் வரும். ஒருசிலர் அரசின் ஜனநாயக, மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டிக்காமல் புலியை மட்டும் விமர்ச்சிப்பது தற்பொழுது முக்கியமல்ல எனவும் என்னுடன் வாதாடுவர். எனினும் அவர்கள் தமிழ் தேசியத்தின் பழைய மாணவர்கள்தான். இங்கு நிலைமை என்னவெனில், இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்வோர் தமிழ் தேசியவாதிகளாக மாறியமை ஒரு சுவாரசியமான விடயம்.

ஆனி மாத 'வானவில்' பத்திரிகையில் ஒரு விவாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்ல விடயம். ஒரு தோழரின் விமர்சனம் நன்றாக முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ் தரப்பில் ஓர் வெற்றிடத்தை 'வானவில்' ஓரளவு நிறைவு செய்கிறது. ஆனால் இங்கு மக்களுக்குப் போவது குறைவாக இருக்கிறது.

மற்றைய முக்கிய விடயம், இங்குள்ள நாம் நவீன உலகின் 'நெற்' வசதியை இன்னமும் உபயோகிக்கவில்லை. நான் உட்படப் பலர் பத்திரிகைகளில்தான் தங்கியுள்ளோம்.

இங்கு நாம் ஓர் அமைப்பை கட்டியெழுப்ப முடியவில்லை. அதற்குக் காரணம் எங்கள் தோழர்கள், நண்பர்கள் மத்தியில் பலத்த கருத்து வேறுபாடுகள். இங்குள்ள இடதுசாரியினர் பல வகையினர். ஒரு சிலர் தமிழ் தேசியவாதத்தை நியாயப்படுத்துகின்றனர். வேறு சிலர் சி.கா.செந்தில்வேல், தணிகாசலம் போன்றோர் போல 'முற்போக்கு' தமிழ் தேசியம் பேசுகின்றனர். இன்னும் சிலர் ஈ.பி.டி.பி சார்பு. ஆகவே எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலை. இருப்பினும் சிலர் எம்மை நம்புகின்றனர். இளைஞர்கள் இணைவதில்லை. பழைய தலைமுறையினர்தான்.

இங்கு தற்போது 6 தினசரிகள் வருகின்றன. தினகரன் – யாழ்.பதிப்பு, தினமுரசு என்பவை அரசு சார்பானவை. ஏனையவை தமிழ் தேசியம் சார்ந்தவை. ஆதலால் சரியான, உண்மையான தகவல்களைப் பெறமுடியாது. தோழர் ஒருவர் ஒரு பத்திரிகை தொடங்க முயற்சித்தார். ஆனால் முடியவில்லை. சி.கா.செந்தில்வேலின் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளராக நீண்டகாலம் இருந்த மலையகத்தைச் சேர்ந்த சட்டத்தரணி தம்பையா, கருத்து முரண்பாட்டால் கட்சியிலிருந்து விலகிச் சென்றுவிட்டார். செல்லும்போது தனது பெயரில் பதிவு செய்யப்பட்டு இருந்த அவர்களது கட்சிப் பத்திரிகையான 'புதிய பூமி'யையும் கொண்டுபோய்விட்டார்.




சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தோழர் ஜயம்பதி விக்கிரமரத்ன யாழ். வந்து கூட்டம் நடாத்தினார். ஆனால் அவருடனும் நாங்கள் முரண்பட்டோம்.

இலங்கையில் பேரினவாதமும் குறும் தேசியவாதமும் கோலோச்சுகின்றன. நியாயமான மார்க்சிய அணுகுமுறையை ஒரு தரப்பும் முன்வைக்கவில்லை. புலிகள் அழிந்த பின்னர் ஒரு பொது வேலைத்திட்டத்தில் மக்களை அணிதிரட்ட, அரசியலை முன்னெடுக்க ஒரு தரப்பினரும் முன்வரவில்லை. வெற்றிடம் தொடர்கிறது. இந்நிலையில் நீங்கள் போன்ற தோழர்கள் இங்கு இருந்தால் நிலைமை வேறாக இருக்குமென நினைக்கிறேன். எப்பொழுது நீங்கள் இலங்கை வர உத்தேசம். பழைய நினைவுகளை மறக்க முடியாமல் இருக்கிறது. உங்களது ஆலோசனைகள், வழிகாட்டல்கள் அவசியம். சகல தோழர்களையும் சுகம் கேட்டதாகச் சொல்லவும்.

தோழமையுடன்
சிவா

(மேலே தரப்பட்டுள்ள பத்திகள் யாழ்ப்பாணத்திலுள்ள தோழர் ஒருவரால் 'வானவில்' ஆசிரிய குழு உறுப்பினர் ஒருவருக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றின் பகுதிகளாகும். அங்குள்ள நிலைமையை ஓரளவு அறிந்து கொள்ள இவை உதவும் என்பதால் இதனை பிரசுரித்துள்ளோம்_ ஆசிரிய குழு)



படிப்பகம்

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி.....

பயன்படுத்தி, தமிழ் மக்கள் உடனடியாக எதிர்நோக்கிய சிங்களக் குடியேற்றம், கல்வி - வேலை வாய்ப்பில் இருந்த புறக்கணிப்பு, மொழிப்பிரச்சினை போன்ற விடயங்களில் தன்னும் ஓரளவு தீர்வுகளை எட்ட வாய்ப்புகள் கிடைத்தபோதும், அவற்றை எல்லாம் ஊதாசீனம் செய்தே தமிழ்த் தலைமைகள் நடந்து வந்துள்ளன. அதன் ஒட்டுமொத்த விளைவே இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஆகும்.

'பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு, இருந்த கோவணத்தையும் இழந்த' கதையாக தமிழ்த் தலைமைகள், எப்பொழுதுமே முழுமையான தீர்வுதான் வேண்டுமென அடம் பிடித்து வந்துள்ளனர். இன்றும் அதுதான் நிலைமை.

தற்பொழுது நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஜனதா விமுத்தி பெரமுன, சோசலிசக் கூட்டமைப்பு, தேசிய சுதந்திர முன்னணி எனப் பல அரசியல் கட்சிகளும் தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிடுகின்றன. அதனால் இத்தேர்தலின் பெறுபேறுகள் எல்லோருடைய கவனத்தையும் பெரிய அளவில் கவர்ந்துள்ளது. ஏனெனில் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிடுவதால், அவற்றுக்கு மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் ஆதரவும் அங்கீகாரமும் உள்ளதென்பதை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டக்கூடும்.

தேர்தல் முடிவுகள் அரசியல் கட்சிகளின் பெயரில் வெளிவந்தாலும், அம்முடிவுகள் கிழக்கின் இன விகிதாசாரத்தைப் புலப்படுத்தப் போகின்றவா அல்லது அரசியல் கட்சிகளின் பலத்தைப் பிரதிபலிக்கப் போகின்றனவா என்பது முக்கியமானது. ஏனெனில் மாகாணசபைத் தேர்தல் ஒன்றில் முதன்முதலாகப் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் முழுமையாகத் தமிழ்க் கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. முஸ்லீம் காங்கிரஸ் முழுக்க முழுக்க முஸ்லீம்களைக் கொண்ட கட்சியாகும். அதேவேளை ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பில் மட்டும் மூவின மக்களுடைய கட்சிகளும் இணைந்து போட்டியிடுகின்றன. அந்த நிலைமையே அந்த அணியின் வெற்றி வாய்ப்புக்கான அடிப்படையாகவும் இருப்பதாகப் பலரும் கருதுகின்றனர்.

இந்தத் தேர்தல் தமிழ் - முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் கிழக்கு மாகாணம் இவ்விரு மக்களினதும் தாயகப் பூமியாகும். ஆனால் துாரதிஸ்டவசமாக இவ்விரு இன மக்களையும் பிரதிநித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லீம் காங்கிரசும் உச்சகட்ட இனவாதப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன. இக்கட்சிகள் தத்தமது இனங்களின் உரிமைகளுக்காக உள சுத்தியுடனும் நேர்மையாகவும் போராடும் கட்சிகளாக இருந்தால், இயல்பாகவே அவர்களது மக்கள் அவர்களுக்கே வாக்களிப்பர். ஆனால் இவ்விரு கட்சிகளும் செய்யும் இனவாதப் பிரச்சாரத்தைப் பார்த்தால், இக்கட்சிகளுக்குத் தமது மக்களின் மேல் நம்பிக்கை இல்லை என்பதே புலனாகின்றது.

எது எப்படியிருப்பினும், யார் மாகாணசபையைக் கைப்பற்றினாலும், மாகாணசபை என்பது இலங்கையைப் பொறுத்தவரை இன அடிப்படையிலும், மாகாண அடிப்படையிலும் மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களைப் பங்கிடும் ஒரு நிர்வாக அலகாகும். எனவே யார் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும், மாகாண சபைக்கான அதிகாரத்துக்காகப் போராடுவது அவசியமாகும். அதேவேளை தமிழ்க் கூட்டமைப்பின் கைகளுக்கு அதிகாரம் போகுமாக இருந்தால், தமிழ்த் தலைமைகள் கடந்த காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் போட்டு உடைத்ததுபோல, இதிலும் நடந்து கொள்வார்கள் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கிறது.

அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள கள நிலவரம் பற்றி ஆய்வு மேற்கொண்ட ஒரு புலம்பெயர் தமிழர் ஒருவர், 'வானவில்' இதழுக்குத் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவையாகும்.

அவர் கருத்தின்படி, பெரும்பாலான தமிழர்கள், தமிழ் பிரிதிநிதிகள் அதிகம் கொண்ட ஒரு மாகாணசபையாகக் கிழக்கு மாகாணசபை அமைய வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால் அதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் குறைவு என்றும் கருதுகின்றனர். தற்செயலாக தமிழ் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றினாலும், அதற்கு மற்றைய பிரதான கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா என்பது ஒருபுறமிருக்க, கூட்டமைப்பு மாகாணசபைக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு ஏதாவது செய்வதைவிட, அரசுடன் மல்லுக்கட்டுவதிலேயே காலத்தை விரயமாக்கும் எனவும் மக்கள் கருதுகின்றனர்.

முஸ்லீம் காங்கிரசைப் பொறுத்தவரை, அதற்கு மாகாணசபையைக் கைப்பற்றும் பலம் எக்காரணம் கொண்டும் கிடைக்கப்போவதில்லை. அதன் முழுத் தந்திரோபாயமும் கிடைக்கும் ஆசனங்களை வைத்துக்கொண்டு, அரசாங்கக் கட்சியுடன் அல்லது தமிழ் கூட்டமைப்புடன் பேரம் பேசுவது மட்டுமே. ஆனால் பெரும்பாலான முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை, முஸ்லீம் காங்கிரஸ் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சேருவதைவிட, அரசுடன் சேருவதையே விரும்புகின்றனர். கிழக்கில், குழல் பிட்டில் உள்ள பிட்டும் தேங்காயப்பூவும் போல, அடுத்தடுத்த கிராமங்களில் ஆண்டாண்டுகாலமாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த தமிழ் - முஸ்லீம் மக்களை முன்னைய தமிழ்த் தலைமைகளும், அவர்களால் வளர்த்துவிடப்பட்ட புலிகளும் தான் பிளவுபடுத்தினார்கள் என்ற கருத்தே அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது.

அதேவேளை, ஆளும் ஐ.ம.சு.கூட்டணி வெற்றிபெற்று சென்ற மாகாணசபை போல ஒரு தமிழர் முதலமைச்சர் ஆக்கப்பட்டாலும், கிழக்கில் வாழும் தமிழ் - முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுமா என்ற



படிப்பகம்

www.padippakam.com

சந்தேகமும் மக்கள் மத்தியில் இருக்கிறது. ஏனெனில் மத்தியில் உள்ள அரசாங்கம் மாகாண அரசாங்கத்துக்கென குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களை வழங்க மறுத்து வருவதுடன், இருக்கின்ற சில அதிகாரங்களைக் கூட நடைமுறைப்படுத்த விடாமல் ஆளுநர் மூலம் தடுக்கின்ற நிலைமையும் கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது. எனவே அரசுடன் சேர்ந்து செயல்பட்டு முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றினாலும், பதவியைப் பெரிதாகக் கருதாது மக்களின் அடிப்படை உரிமைகள், தேவைகளுக்காகத் தமிழ் - முஸ்லீம் பிரதிநிதிகள் போராட வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளதாக அந்த ஆய்வாளர் கூறுகின்றார்.

இலங்கை அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால், மக்களைப் பொறுத்தவரை மாகாண சபைகள் தற்செயலாக விழுந்த ஒரு பரிசுச்சீட்டு என்றுதான் சொல்ல வேண்டும். எனவே அதைப் பாதுகாப்பதும், அதற்கான அதிகாரங்களைப் படிப்படியாகப் பெறுவதும், தமிழர்களுக்கு மட்டுமின்றி இலங்கையின் ஒவ்வொரு மாகாண மக்களுக்கும் அவசியமான விடயமாகும். எனவே அதில் இனவாதச் சேற்றை அள்ளிவீசிப் பிரச்சாரம் செய்வதைச் சகலரும், குறிப்பாக தமிழ் - முஸ்லீம் கட்சிகள் கைவிட வேண்டும். முக்கியமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வாக்காளர்கள் இத்தேர்தலில் பிற்போக்குவாத, பிரிவினைவாத, இனவாத சக்திகளுக்கு எதிராகத் தமது தீர்ப்பை வழங்கி, தமது வாழ்வையும் பெருமையையும் நிலைநாட்ட வேண்டும். *

---

7ம் பக்கத்தொடர்ச்சி...

1975ல் அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்த தென் வியட்நாம் விடுவிக்கப்பட்ட போது, வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து ஒரு சிறு அறிக்கை தன்னும் வெளியிடாத செல்வநாயகம், வியட்நாம் மக்களின் விடுதலையைக் கொச்சைப்படுத்தும் வகையில், 'தென்வியட்நாம் தலைநகர் சைகோனில் வாழ்ந்த 5000தமிழர்களுக்கம் என்ன நடந்தது?' என உடனடியாக அறிக்கை விடுத்தார்.

1962ல் இந்திய - சீன எல்லை யுத்தம் நடந்த போது இலங்கை அரசு அதில் நடுநிலைமை வகித்து போரை நிறுத்த முயற்சிக்கையில், தமிழரசுத் தலைவர் செல்வநாயகத்தின் புதல்வர் சந்திரகாசனோ ஒருதலைப்பட்டசமாக சீனாவைக் குற்றம்சாட்டி கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யப்போய், கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்களால் விரட்டப்பட்டார்.

1960களில் வடபகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராடிய போது, அந்தப் போராட்டத்துக்கு (சீனசார்பு) கம்யூனிஸ்ட் கட்சி தலைமைதாங்கியது என்பதற்காக, 'கம்யூனிஸ்ட்டுகள் சங்கானையில் (சங்கானையில் போராட்டம் தீவிரமாக இருந்ததால்) ஒரு சாங்காயை (சீனாவின் பெருநகரம்) உருவாக்க முனைகிறார்கள்' என நாடாளுமன்றத்தில் தமிழரசுக்கட்சி செயலாளர் அ.அமிர்தலிங்கம் பேசியதிலிருந்து, அவர் சோசலிச சீனாவைப்பற்றி என்ன கருத்து வைத்திருந்தார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

தமிழ் ஊடகங்கள் கூட அன்றும் இன்றும் சோசலிச விரோத, சீன விரோதப் பிரச்சாரத்தையே மேற்கொண்டு வருகின்றன. இந்திய - சீன எல்லை யுத்தம் நடந்தபோது இந்தியாவைச் சேர்ந்த பிராமணரான ஹரன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஒரேயொரு தினசரியான 'ஈழநாடு' பத்திரிகை மிகவும் மோசமான சீன விரோதப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இன்று அந்தப் பணியை யாழ்ப்பான 'உதயன்' பத்திரிகை கண்ணை மூடிக்கொண்டு செய்கிறது. புலம்பெயர் புலிசார்பு தமிழ் ஊடகங்களின் நிலை பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இலங்கைத் தமிழ் தலைமைகளின் சோசலிச விரோதப் போக்குடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் தலைவர்களின் நிலை பரவாயில்லை. கலைஞர் மு.கருணாநிதி தனது இளமைக்காலத்தில் சோவியத் தலைவர் ஸ்டாலின் அவர்கள்பால் ஏற்பட்ட ஆகர்சிப்பால் தனது மகனுக்கு 'ஸ்டாலின்' எனப் பெயர் சூட்டினார். ஈ.வே.ரா. பெரியார் ஸ்டாலின் காலத்து சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்து அங்குள்ள அரசியல் அமைப்பையும், வாழ்க்கை முறைமையையும் பார்த்துவிட்டு இந்தியா திரும்பி அது பற்றி மிகவும் சிலாகித்துப் பேசினார். இந்தியாவிலுள்ள பல்வேறு கட்சிகள் சீனாவுக்கு விரோதமாக இருந்தாலும், சோசலிச அமைப்பைக் குறை கூறுவதில்லை.

இலங்கைத் தமிழ்த் தலைமைகள் மட்டும்தான் அன்றும் இன்றும் மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளுக்குத் துதி பாடுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த மேற்கு நாடுகள்கூட இன்று சீனாவின் வளர்ச்சியை பொறாமையுடன் ஏற்றுக்கொள்வதுடன், அதனுடன் உறவுகளைப் பேணவும் ஆவலுடன் இருக்கிறார்கள். ஆனால் சுரேஸ் போன்ற கற்றுக்குட்டிகளுக்குத்தான் சீனாவின் மகிமை புரியவில்லை. அது புரியாவிட்டாலும் பரவாயில்லை, உலகின் மிகச் சக்திவாய்ந்த, இன்னும் சில வருடங்களில் அமெரிக்காவையே விஞ்சப்போகிற ஒரு புகழ்பூத்த நாட்டைப்பற்றி அவதூறாகப் பேசி, இலங்கைத் தமிழ் மக்களுக்கு எவ்வளவு விபரீதங்களைக் கொண்டு வரப்போகிறார்கள் என்பதை நினைக்கும்போதுதான் கவலையளிக்கிறது.

ஏற்கெனவே இந்தியாவுடனான உறவைக் கெடுத்துக் கொண்டாயிற்று. இப்பொழுது சீனாவுடன் சொறிய ஆரம்பித்திருக்கிறாகள். இது அவ்வளவுக்கு நல்லதல்ல. சம்பந்தன் போன்ற மூத்த தலைவர்கள், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களின் கவைக்குதவாத 'கலரி' பேச்சுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். சீனா பற்றிய சுரேசின் அவதூறுக்கு சம்பந்தனும் அவரது கூட்டமைப்புத் தலைமையும் பிராயச்சித்தம் செய்வது அவசியத்திலும் அவசியம்.

**- சின்னக்குட்டி**

---



படிப்பகம்

www.padippakam.com



# அசாம் கலவரத்துக்கு காரணம் என்ன?

அசாமில் ஏற்பட்டுள்ள இன கலவரம் இன்று இந்தியா முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

அசாமை சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர் உள்ளிட்ட நகரங்களிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் வேலை பார்த்து வருகின்றனர். அவர்கள் தங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என கருதி இங்கிருந்து வெளியேறி தங்கள் சொந்தஊருக்கு கூட்டம் கூட்டமாக செல்கின்றனர்.

அசாம் கலவரத்தை கண்டித்து மும்பையில் நடந்த பேரணியில் வன்முறை சம்பவம் ஏற்பட்டது. இதனால் தங்கள் மீது தாக்குதல் நடக்கலாம் என பிற பகுதிகளில் உள்ள அசாம் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

மேலும் அசாமியர்களை தாக்கப்போவதாக எஸ்.எம்.எஸ். தகவல்களும் பரவி வருகின்றன. எனவேதான் அவர்கள் பீதியில் இங்கிருந்து வெளியேறி வருகிறார்கள்.

இந்த பிரச்சினையால் நாடு முழுவதும் உள்ள மக்கள் அசாம் கலவரம் தொடர்பாக விவரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அசாமில் போடோ இன மக்களும், முஸ்லிம் சமுதாய மக்களும் அதிக அளவில் வசித்து வருகின்றனர்.

ஆரம்ப காலத்திலிருந்தே இவர்களிடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன. கடந்த மாதம் அங்குள்ள கோக்சகார் மாவட்டத்தில் 2 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அடுத்த 2 நாள் கழித்து மேலும் 2 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக போடோலேண்ட் அமைப்பை சேர்ந்த முன்னாள் தீவிரவாதிகள் 4 பேர் கொல்லப்பட்டனர். இது பெரிய கலவரமாக வெடித்தது. மாநிலம் முழுவதும் இந்த கலவரம் பரவி இதுவரை 77 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

4 லட்சம் பேர் அகதிகளாக வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து உள்ளனர். மொத்தம் உள்ள 27 மாவட்டங்களில் 6 மாவட்டங்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கும் கலவரம் பரவி வருகிறது. இந்த கலவரத்துக்கு விரிவான பின்னனிகள் உள்ளன. அசாம் மாநிலத்தில் ஆரம்பத்தில் போடோ இனத்தவர்களே அதிகமாக இருந்தனர்.

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது பாகிஸ்தான் தனி நாடாக பிரிக்கப்பட்டது. இதில் வங்காளதேசம், கிழக்கு பாகிஸ்தான் என்ற பெயரில் பாகிஸ்தானோடு இருந்தது. அந்த பிரிவினையின்போது வங்காளதேசத்தை சேர்ந்த பல லட்சம்பேர் மேற்கு வங்காளம், அசாம், திரிபுரா, ஒரிசா, டெல்லி ஆகிய மாநிலங்களில் குடி பெயர்ந்தனர். சுமார் 30 லட்சம் பேர் அகதிகளாக இந்தியா வந்தனர்.



அப்போதே அசாம் மாநிலத்தில் கணிசமான வங்காள தேச மக்கள் குடியேறியிருந்தனர். அதன்பிறகு 1971-ம் ஆண்டு வங்கதேச போரின்போது வங்காளதேசத்தை சேர்ந்த சுமார் 1 கோடி பேர் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடிவந்தனர். இவர்கள் பெரும்பாலோர் அசாம், மற்றும் திரிபுராவில் குடியேறினார்கள்.

போர் முடிந்த பிறகு பலர் சொந்த நாட்டிற்கு திரும்பினாலும், பெரும்பாலான மக்கள் அசாமிலேயே தங்கி விட்டனர். அதில் இருந்தே போடோ மக்களுக்கும் அகதிகளாக வந்தவர்களுக்கும் இடையே மோதல் போக்கு இருந்து வந்தது. ஆனால் தொடர்ந்து வங்காள தேசத்தில் இருந்து ஏராளமானோர் அசாமில் சட்டவிரோதமாக குடியேறி கொண்டே இருந்தனர்.

அவர்கள் குடியுரிமை, ஓட்டுரிமை போன்றவற்றை பெற்று கொண்டனர். இது மோதல் போக்கை மேலும் அதிகரித்தது. இந்த பிரச்சினை 1983-ம் ஆண்டு பெரும் கலவரமாக வெடித்தது. அப்போது 3 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

வங்க தேச மக்கள் குடியேற்றம் அதிகஅளவில் இருந்ததால் அசாமில் உள்ள 27 மாவட்டங்களில் 11 மாவட்டங்கலில் வங்காளதேசத்தினர் மெஜாரிட்டியாக உள்ளனர். அவர்கள்தான் அரசியல் சக்தியை நிர்ணயிக்கும் அளவுக்கு அங்கு நிலமைகள் உள்ளன. இதுவே மோதலுக்கு காரணமாக இருந்து இப்போது பெரும் கலவரமாக வெடித்துள்ளது.

(இச்செய்தி மாலைமலர் நாளேட்டிலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகின்றது) *



படிப்பகம்